2017 ஜூன் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மருத்துவமனை சிறப்பாக இருக்கிறது என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பாராட்டியதற்கு நன்றி. திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை* Multi Super Speciality Hospital *ஆகத் தரம் உயர்த்தப்பட்டு, உயர் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல,* Higher centre*–ல் தேவையான அனைத்து உபகரணங்களுடன் கூடிய வசதி இப்போது சிறப்பாகச் செய்யப்பட்டு வருகிறது. கடந்த முறை தாங்கள் சார்ந்திருக்கக்கூடிய கட்சியினுடைய உறுப்பினர் நம்முடைய காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருந்தார்கள். நாங்கள் எப்படி குரோம்பேட்டை மருத்துவமனையை விபத்துக் காய சிகிச்சை மையமாகத் தரம் உயர்த்துகின்றோமோ—அண்ணன் அவர்களுக்கும் நல்ல தகவல்—அதேபோல காரைக்குடியிலும் அதே தொகையில் விபத்துக் காய சிகிச்சை மையமாக இந்த ஆண்டு அந்த மருத்துவமனையை உயர்த்துவதற்கு ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. அதேபோலதான், பல்லாவரத்திற்கும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத் தலைமை மருத்துவமனையில் அனைத்து அதிநவீன வசதிகளும் செய்து தரப்படும். இப்போது குரோம்பேட்டை மருத்துவமனைக்கு* C.T. Scan *வழங்குவதைப்போல, வருங்காலத்திலே நாங்குநேரி மருத்துவமனைக்கும் தேவைப்படுகின்ற உபகரணங்கள் நிதி நிலைமைக்கேற்ப வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***5250—திரு. அம்மன் கே. அர்ச்சுணன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் (தெற்கு) வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டாட்சியர் அலுவலகமானது தற்போது அனுப்பர்பாளையம் கிராமத்தில் TSN 969—ல், 2.58 ஏக்கர் அளவுள்ள வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வளாகத்தில் உள்ள அலுவலகங்கள் அனைத்தும் ஒரே கட்டடத்தில் இயங்கும் வண்ணம் ஒருங்கிணைந்த கட்டடம் கட்டுவதற்கு உரிய முன்மொழிவுகள் சென்னை வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் வாயிலாக அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

முற்பகல் 10—55

அதனடிப்படையில், புதிய வட்டாட்சியர் அலுவலகம், நில அளவையர் அலுவலகம், உணவுப் பொருள் வழங்கல் அலுவலகம், சார்நிலைக் கருவூலம், நகர நிலவளத் திட்ட அலுவலகம் உட்பட ஒருங்கிணைந்த பெருந்திட்ட வளாகம், 233.30 இலட்சம் ரூபாய் செலவில் கட்ட நிருவாக ஒப்புதலும், நிதி ஒப்புதலும் அரசாணை (நிலை) எண் 162, வருவாய்த் துறை, நாள் 4—5—2017—ன்மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, கோயம்புத்தூர் மாவட்டம், பொதுப் பணித் துறை (கட்டுமானங்கள்), கோட்ட செயற்பொறியாளர்மூலம் கட்டுமானப் பணிகள் தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுனன் அவர்கள்.

திரு. அம்மன் கே. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணை விட்டு மறைந்தாலும், விண்ணுலகை ஆளும் எங்களது இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியோடு நடைபெறும் இந்த அவையிலே, எள் என்றால் எண்ணெய்யாகச்

2017 ஜூன் 14]

செயல்பட்டுக்கொண்டிருக்கும் இந்த அரசிலே, நான் கேள்வி கேட்பதற்கு முன்பே எனக்கு பதில் கிடைத்திருக்கிறது. அதற்காக இந்த அரசை முதலில் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்க அரும்பாடுபட்டுக்கொண்டிருக்கும் எங்கள் கொங்குநாட்டு சீமையிலே பிறந்த அண்ணன், மாண்புமிகு முதல்வர் எடப்பாடியார் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சியிலே நல்லாட்சி செய்து கொண்டிருக்கும், எங்களது கோயம்புத்தூர் மாவட்ட கழகச் செயலாளர், அருமை அண்ணன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்குகிறேன். எனக்கு இந்த நல்லதொரு வாய்ப்பினை அளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றிகூறுகிறேன். எனக்கு மிகவும் நல்ல முறையிலே பதில் கிடைத்தது. நல்லாட்சி செய்கின்ற இந்த அரசுக்குக் கிடைத்த நற்சான்றிதழாக இதை நினைத்து, என் கேள்விக்கு நல்ல பதில் அளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தாலுகா அலுவலகம் நகர எல்லையிலே அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை, சென்ற வருடமே நான் இந்த அவையிலே வைத்து, அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மறைந்த முதலமைச்சர் அவர்களும், 'அது பரிசீலிக்கப்படும்' எனத் தெரிவித்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சார்பாக மூன்று முறை அது உறுதி செய்யப்பட்டது. ஆனால், இதுவரை கடையநல்லூர் நகர எல்லையிலேயே அந்த வருவாய் அலுவலகம் அமைக்கக்கூடிய பணி காலதாமதமாக மேற்கொள்ளப்படுவதால், அங்கே இருக்கக்கூடிய மக்கள் மத்தியிலே, மீண்டும் அதை வனப் பகுதிக்கு எடுத்துச் சென்று விடுவார்களோ என்ற ஓர் அச்சம் நிலவி வருகின்றது. மக்களுடைய கோரிக்கையினை வலியுறுத்தக்கூடிய வகையில், நாங்கள் அங்கே, எல்லா அரசியல் கட்சிகளையும் அழைத்து, ஒரு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும் நடத்தியிருக்கின்றோம். எனவே, மறைந்த முதல்வர் அவர்கள் ஏற்கெனவே அளித்த வாக்குறுதியை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலும், மாண்புமிகு வருவாய்த் துறை

அமைச்சருடைய வாக்குறுதியைச் செயல்படுத்தக்கூடிய வகையிலும், இந்த அரசாங்கம் கடையநல்லூர் தாலுகா அலுவலகத்தை நகர எல்லையிலேயே, சொந்தக் கட்டடத்தில் செயல்படுவதற்கான முயற்சியை எடுத்து, விரைவாக செய்து தர வேண்டுமென்பதை தங்கள் வாயிலாக இந்த அவையில் வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார்கள். பொதுவாக மாவட்ட நிருவாகத்திலே வருவாய்த் துறையினுடைய பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனால், பணிச் சுமைகளை மேம்படுத்தும் பொருட்டும், பொது மக்கள் எளிதாக அணுகி, வருவாய்த் துறையினுடைய சேவையைப் பயன்படுத்திக்கொள்வதற்கும், வருவாய்த்துறையிலே தேவைப்படுகிற அலுவலகக் கட்டடங்கள், குடியிருப்புக் கட்டடங்கள் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு வசதிகளை, முன்னெப்போதும் இல்லாத வகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையிலே செய்து வருகிறது என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.*

அந்த வகையிலே, கடந்த ஆறு ஆண்டுகளில் 8,498 கட்டடங்களை ரூபாய் 513 கோடியிலே கட்டிக் கொடுத்திருக்கிற ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது சட்டமன்ற உறுப்பினராக அங்கிருந்து தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். இதற்கு முன்பு கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த மாண்புமிகு முன்னாள் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு இதை எடுத்துச் சென்றதன் காரணமாக, அங்கே ஒரு புதிய வட்டம் உருவாக்கப்பட்டது. அந்தப் புதிய வட்டத்திற்கான தற்காலிக இடமாக தற்போது அங்கே ஓர் இடம் மாவட்ட

2017 ஜூன் 14]

நிருவாகத்தால் தேர்வு செய்யப்பட்டு, தாலுகா அலுவலகம் அங்கே செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டவுடன், அனைத்து மக்களுடைய ஒருமித்த கருத்தாக, குறிப்பிட்ட அந்த இடத்திலே கட்டடம் கட்ட வேண்டுமென்கிற கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். எனவே, இடம் தேர்வு செய்வதிலே, மாவட்ட நிருவாகம், மக்கள் பிரதிநிதிகள் உட்பட அனைவரிடையே ஒருமித்த கருத்து ஏற்பட்டவுடன், அங்கே உடனடியாகக் கட்டடங்கள் எழுப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்ற, அதைப்போல பழைய கட்டடங்களில் செயல்படுகின்ற அலுவலகங்கள் அனைத்திற்கும் தேவையான புதிய கட்டடங்களைக் கட்டித் தருகின்ற ஒரே அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

9—

கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை

***12846—திரு. ஆர். கணேஷ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் தொகுதி, தும்மனட்டி ஊராட்சி, தும்மனட்டியில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?